வாஸ்து புருஷன் என்பவர் பூமியில் இருக்கக்கூடிய ஒரு தேவதை. இவர் பூமிக்குக் காவலாக இருப்பவர். இவர் சில மாதங்களில், சில தினங்களில் தூங்கிபவர் எழுந்து பல்துலக்கி, குளித்து, சாப்பிட்டு, வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கும் நேரத்தில் தான் புதுவீடு குடிபுகுதல், புதுவீடு கட்டுதல், கும்பாபிஷேகம் செய்தல் போன்றவற்றைச் செய்வார்கள்.

வாஸ்து பெரிய உருவமுடையவர், கோரமான பயங்கர உருவமுடையவர். பூமியின் மேல் பற்றும், அன்பும் கொண்டவர். வாஸ்து பூமியில் படுத்துக் கொண்டிருக்கும் நேரம் மேற்கண்ட நிகழ்ச்சிகளுக்குக் கெட்ட நேரமாகும். அவர் எழுந்து அமர்ந்திருக்கும் நேரம் நல்ல நேரமாகும்.

வாஸ்துவின் உடல் சிவப்பு நிறமுடையது, அவர் விரும்பி ஏற்றுக் கொள்வது கோழி, ஆடு பலி, வெள்ளை சாதம், நீர் பூசனிக்காய் ஆகியவைகளாகும். இரத்தத்தை விரும்புவார். வாஸ்து பூமியில் பூமியைக் கட்டிப்பிடித்துப் படுத்திருப்பார். வாஸ்து அசுத்தமானவர். வருடத்தில் சில நாட்களைத் தவிர, சில நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில் எல்லாம் படுத்துத் தூங்கிக் கொண்டே இருப்பார். பூமியைக் காவல் பார்த்துக் கொண்டிருப்பார். வாஸ்து ~~பூமி~~ வானத்திலிருந்து விழுந்தவர் அல்ல, பூமியிலேயே இருந்தவர். அவர் உடல் நலமுள்ளவர்தான். அவர் உடலில் எந்தவிதமான வியாதியோ அங்கஹீனமோ கிடையாது.

வாஸ்து பூமியில் மண்ணைத் தழுவிக் கொண்டு குப்புறப் படுத்திருப்பார். (அதாவது வயிற்றுப்பக்கமாகப் படுத்திருப்பார், அவருடைய முதுகு மேலே இருக்கும்)

வாஸ்து பற்றி இந்தக் கேள்விக்கு அந்தக் குருக்கள் பதில் கொடுத்தார். வாஸ்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அவர் பூமிக்குண்டான ஒரு தெய்வம் அவ்வளவுதான்.

சப்தவிழா என்பதை இங்கு 'சப்தாவரணம்' என்றும், 'சத்தாவரம்' என்று இங்கு கூறப்படுவதாக சுந்தரக் குருக்கள் கூறுகிறார். அத்துடன் இங்கு இதைத் தெருசனம் (தரிசனம்) என்று சொல்வார்கள். இந்த விழா முக்கியமாக சிவன் ஆலயங்களில்தான் நடைபெறும் என்று சுந்தரக்குருக்கள் கூறுகிறார். மகாவிஷ்ணு கோவில்களில் இந்த விழா நடந்து நான் பார்த்ததில்லையென்று சுந்தரக் குருக்கள் கூறினார். நீங்கள் குறிப்பிட்ட "சப்தவிழா" என்பது இங்கு நடைபெறும் "சப்தாவரணம்" என்பதுதான் என்று நானும், திரு சுந்தரக் குருக்கள் அவர்களும் நினைக்கிறோம்.

சப்தாவரணம் எனும் இந்தவிழா ஒவ்வொரு சிவன் ஆலயம், முருகன் ஆலயம் இவைகளில் ஆண்டு உற்சவத் திருவிழா முடிந்து 5வது நாளில் நடைபெறுமென்று சுந்தரக் குருக்கள் கூறுகிறார். ஒவ்வொரு ஆண்டின் உற்சவம் முடிந்து சப்தாவரணம் என்பதுதான் கடைசி விழா. இதற்கடுத்தது மஞ்சநீர் விளையாட்டுத்தான்.

இந்த விழா சிவன் பார்வதி ஆகியோர்கள் திருமணம் முடிந்து 5வது நாள் நடைபெறும். அன்று சிவன் பார்வதி மூலஸ்தான மூர்த்திகள், உற்சவமூர்த்திகள் ஆகியவைகளுக்கு அபிஷேகம் செய்து, அடையலங்காரம் செய்து, அமுது தெங்காய் பழம் படைத்துப்பூஜை செய்து (அலங்கார தீப ஆராதனைகளுடன் பூஜை நடைபெறும்) தீபாராதனை செய்வார்கள். பிறகு உற்சவ மூர்த்திகளான சிவபெருமான் பார்வதி ஆகியோர்களை தனித்தனி சப்பரங்களில் (சப்பரத்தில்) வைத்துக்கொண்டு கோவிலைச்சுற்றி வலம் வந்து அரசு, வேம்பு இருக்கும் இடத்தை அல்லது கருட கம்பத்தை 12 சுற்றுச் சுற்றிவரவேண்டும் (கன்னபுரம் சிவன் கோவிலில் கருடகம்பத்தைச் சுற்றிவருவார்கள்) இவ்வாறு சுற்றிவரும்பொழுது முதலில் சகலவாத்தியங்களுடன் (சகலவாத்தியங்களுடன்) 5முறை சுற்றிக் கொண்டுவருவார்கள். பிறகு தனியே சங்குவாத்தியத்

துடன் இரண்டு சுற்று, ஓதுவார் திருப்புகழ் தேவாரம் பாடிக்கொண்டு இரண்டு சுற்று, பிராமணம் மந்திரம் சொல்ல ஒரு சுற்று, எந்த வித சத்தமும் இல்லாமல் மௌனமாக ஒரு சுற்று பிறகு கடைசியாக சகல வாத்தியங்களுடன் (எல்லா விதமான வாத்தியங்களுடனும்) ஒரு சுற்று இவ்வாறும் சிவபெருமானையும், பார்வதியையும் எடுத்துக் கொண்டு கருட கம்பத்தைப் பன்னிரண்டு சுற்று வந்தபிறகு அவ்விடத்திலிருந்து சிறிது தூரம் சென்று சுவாமியையும், அம்மனையும் கிழக்கு முகமாக வைத்து நிற்பார்கள். பிறகு சுவாமி, அம்மன் ஆகியோர்கள் முன் ஓதுவாரை நிறுத்தியபின் பிராமணர் அவருக்கு விபூதி கொடுத்து, தலையில் ஒரு சிவப்புத்துணியைக் கட்டுவார், கழுத்தில் பூமாலை போடுவார். பிறகு ஓதுவார் தன்னிடமுள்ள ஏட்டுச் சுவடியிலிருந்து 'திருவூடல்' எனும் புராண வரலாற்றைப் படிப்பார். குறிப்பிட்ட சில பகுதிகளைப் படித்தவுடன் அம்மன் சிவபெருமானிடம் கோபித்துக் கொண்டு கோவிலுக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொள்வார். பிறகு சிவபெருமான் சென்று கதவைத் திறக்கும் படி மூன்று முறை ~~கத~~ கதவைத் தட்டுவார், கதவு திறக்கப் படும். பிறகு நந்திதேவர் பார்வதிதேவியிடம் சென்று கோபத்தை சாந்தப்படுத்தி சமாதானம் செய்து வைக்க முயற்சிப்பார்; அவர் தோல்வியடைவார். பிறகு சுந்தரமூர்த்தி நாயனார் பார்வதி தேவியிடம் தூதுசென்று கோபத்தைத் தணித்து சமாதானம் செய்ய முயற்சி செய்து அவரும் தோல்வியடைவார். 3வதாக சண்டிகேஸ்வரர் அம்பாளிடம் சென்று "சிவபெருமான் தங்களுக்காகப் பட்டாடைகள், நகைகள் நிறைய வைத்திருக்கிறார்" என்று கூறுவார். இதுகேட்ட அம்பாளின் (பார்வதியின்) கோபம் தீர்ந்து விடும் பிறகு சிவபெருமானும் கோவிலுக்குள் சென்று விடுவார்.

சிவபெருமானுக்கும் பார்வதிக்குமிடையில் நந்திதேவர், சுந்தரமூர்த்தி நாயனார், சண்டிகேஸ்வரர் ஆகியோர்கள் சமரசம் (சமாதானம்) செய்து வைப்பதாக அமைந்த பாடல்களையும் உரையாடலையும் ஓதுவார் தன்னிடமுள்ள ஏட்டுச் சுவடியிலிருந்து படிப்பார். அதாவது ஓதுவார் பார்வதிதேவியிடம் சென்று அவள் முன் நின்று சிவபெருமான் என்ன சொன்னார் என்பதையும் பிறகு சிவபெருமான் முன் நின்று பார்வதி தேவி என்ன சொன்னாள் என்பதையும் ஏட்டிலிருந்து படிப்பார். சிவபெருமானிடமிருந்து தூது செல்லும் நந்திதேவர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர்களைப் பார்வதிதேவி தன் தோழிகளை விட்டு அடித்துத் துரத்துவாள். அதைக் குறிக்கும் முகமாக இப்பொழுதும் கன்னபுரம் சிவன் கோவிலில் ஓதுவார் உள்ளே சென்று அம்மன் முன் ஏட்டுப்பாடல்களைப் படித்துவிட்டு திரும்ப வரும் பொழுது கதவின் அருகில் தேவதாசிகள் நின்று கொண்டு தென்னமட்டையாலும், வாழைமட்டையாலும் ஓதுவாரை அடிப்பார்கள். பிறகு கோவில் மிராஸ்தார்களுக்கெல்லாம் பட்டம் பரிவட்டம் கட்டப்படும். முதலில் கோவில் குருக்கள், பிறகு அர்ச்சகர், பிறகு செங்கண்ண குலக்கவுண்டர், தோரகுலக்கவுண்டர், கணவாளகுலக்கவுண்டர், கர்ணம், மற்றும் இதர கோவில் சிப்பந்திகள் ஆகியோர்களுக்குப் பட்டம் பரிவட்டம் கட்டுவார்கள். பட்டம்பரிவட்டம் கட்டுவதென்பது மேலே குறிப்பிட்ட ஒவ்வொருவரையும் சிவபெருமான் முன் நிறுத்தி அவருக்குப் பிராமணர் விபூதி கொடுத்து, தலைக்குச் சிவப்புத்துணி கட்டி, கழுத்தில் பூமாலை போட்டு வைப்பார். அவர் உள்ளே சென்று பார்வதியம்மனை வணங்கிவிட்டு வரவேண்டும். இப்படி இவர்கள் வரும்பொழுது பெண்கள் கதவருகில் நின்று வாழைமட்டையாலும், தென்னமட்டையாலும் அடிப்பார்கள். பட்டம்பரிவட்டம் கட்டுவது அவர்கள் எல்லாம் சென்று பார்வதிதேவியைச் சமாதானம் செய்வது போன்ற நோக்கந்தான்.

இப்பகுதியில் இம்மாதிரி விழாக்களுக்கு ஓதுவார் எனும் புலவர்தான் புராண நூலைப் படிப்பார். ஓதுவார் என்பது ஒரு ஜாதி யென்று அந்தணர்கள் கூறுகிறார். அத்துடன் சில பகுதிகளில் பிராமணரும் படிப்பதுண்டு என்று கூறுகிறார்.


மேலும் இந்த நூல் படிப்பதற்கு ஒரு தனிப்பட்ட பட்டப்படிப்பு கிடையாது. ஏட்டைப் படித்துப் புரிந்து விளக்கம் கொடுக்கும் அளவிற்குப் படிப்பு இருந்தால் போதுமாம். இந்த ஏட்டைப் பாடலைப் பாடி அதற்கான விளக்கவுரையும் கூறுவதுண்டு. இந்த விழாவிற்கு ஓதுவார் ஏட்டைப் படிக்குமிடத்தில் மக்கள் நின்று கொண்டு வரலாற்றைக் கேட்பார்கள். இத் திருவிழாவிற்காக ஓதுவார் படிக்கப்படுவது 'திருவூடல்' எனும் புராணப் பாடலாகும். கண்ணபுரம் சிவன் ஆலயத்தில் நடக்கும் இந்த விழாவிற்குப் படிக்கப் படுவது.

பகவத் புராணம் அல்லது பகவத் கீதை இவைகள் படிக்க நான் கேட்டதுமில்லை நான் படித்ததுமில்லை. ஆகவே இப்படிப்பட்ட புராணங்களைப் பற்றி எனக்கெதுவும் தெரியாது.

சப்தாவரணம் எனும் இந்த விழா வருடத்தில் இரண்டு முறை கண்ணபுரம் சிவாலயத்தில் நடைபெறுவதுண்டு. ஒன்று சித்திரைத் திருவிழாவின் பொழுது நடைபெறும். இதை "ஆருத்ரா தெருசனம்" (தரிசனம்) என்று சொல்வார்கள். இரண்டாவது மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரன்று நடைபெறும். இதைத் 'திருவாதிரை தெருசனம்" என்று சொல்வார்கள். மேற்கண்ட இரண்டு விழாக்களும் ஒரே மாதிரிதான் நடக்கும், ஒரே மாதிரி சடங்கு. இவைகள் இரண்டுக்கும் புலவர் ஏடு படிப்பார். ஒவ்வொரு முறையும் புலவர் ஏடு படிக்கும் நேரம் சுமார் 1½ மணிநேரமாகும் என்று கூறலாம். மேலும் கண்ணபுரம் சிவன் கோவிலின் புரட்டாசி மாதம் நடைபெறும் அம்பு சேர்வை எனும் விழாவிற்கு "வேடுபறி" எனும் புராண வரலாற்றைப் படிப்பார் ஓதுவார்.

சப்தாவரணம் எனும் விழாவின் சுருக்கம். 'சிவபெருமானுக்கும், பார்வதிக்கும் திருமணம் நடந்து 5வது நாள் சிவபெருமான் "வேட்டைக்குப் போய்வருகிறேன்" என்று பார்வதி தேவியிடம் கூறிவிட்டு தாருகாவனம் சென்று ரிஷி பத்தினிகளுடன் காதல் லீலைகள் புரிந்து சல்லாபமாக இருந்தார். இதையறிந்த பார்வதி தேவி கோபமுற்று கோவில் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொள்கிறாள். அதன் பிறகு நந்திதேவர், சுந்தரமூர்த்தி சுவாமி, சண்டிகேஸ்வரர் ஆகியோர்கள் பார்வதி தேவியிடம் சென்று சமாதானம் செய்ய வைக்கிறார்கள்.

# கன்னபுரம் சிவன் ஆலயம்




○ △ சிவனும் பார்வதியும் கோவிலைச் சுற்றி வந்த பிறகு கருடகம்பத்தை 12 சுற்றுகள் சுற்றிப் போய் நிற்குமிடம்

○ பார்வதி தேவி சிவபெருமானிடம் கோபித்துக் கொண்டு கோவிலுக்குள் போய்விடுவதைக் குறிக்கும் கோடு.

△ பிறகு சிவபெருமான் சென்று கதவைத் தட்டி விட்டு நிற்குமிடம்.

தாளிடப்படும் கதவு உள்ள இடம்.

× ஓதுவார் ஆரம்பத்தில் சிவன் பார்வதி முன் நின்றும் பிறகு சிவன், பார்வதி அடியார்கள் முன்னிலையில் மாறி மாறி நின்று புராணவரலாறு படிப்பதைக் குறிக்குமிடம்.